<u>பத்திரிக்கை செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 23.01.2014 அன்று சென்னை, எழிலகம் வளாக கூட்டரங்கில், மாவட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோருடனான மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பொது விநியோகத் திட்டத்தில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இடம்பெறச் செய்ய வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளை முனைப்புடன் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 18 ஆயிரம் மெ.டன் தரமான அரிசி 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் சர்க்கரை, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, கோதுமை ஆகியனவும் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மத்திய அரசு பருப்பு வகைகளுக்கும், பாமாயிலுக்கும் வழங்கி வந்த மானியத் தொகையினை நிறுத்தி விட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் மானிய

விலையில் பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் ஒவ்வொரு மாதமும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கையின் பயனாக 20 ரூபாய்க்கு 1கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் வெளிச்சந்தை அரிசியின் விலை வெகுவாக குறைந்துள்ளது. தற்போது செயல்பட்டு வரும் 311

கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பு அங்காடிகள் மூலம் இதுவரையில் 67 ஆயிரத்து 725 குவிண்டால் வெளிச்சந்தை அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. அரசே காய்கறிகளை நேரடியாக கொள்முதல் செய்து 40 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகிறது. இதுவரையில் 2,775 மெ.டன் காய்கறிகள் 8.17 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்ட தேவைக்கென தமிழ்நாட்டில் உள்ள அரசு கிடங்குகள் மற்றும் இந்திய உணவுக் கழக கிடங்குகளில் சுமார் 10 இலட்சம் மெ.டன் அரிசி கையிருப்பில் உள்ளது. நியாய விலை அங்காடிகளுக்கு வழங்கப்படும் அரிசி உள்ளிட்ட அனைத்து பொருள்களும் உரிய தரத்துடன் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் தரமான பொருள்கள் மட்டுமே அங்காடிகளில் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்றும், அங்காடிகளை உரிய நேரத்தில் திறந்து வைத்து அத்தியாவசியப் பொருள்கள் எல்லா வேலை நாட்களிலும் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், எடை குறைவின்றியும் உரியவர்களுக்கு பொருள்களை வழங்க ஆவன செய்யுமாறு அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் கேட்டுக் கொண்டார். மேலும், அனைத்து அங்காடிகளிலும் வேலை நேரம், விடுமுறை நாட்கள், பகுதிநேரக் கடைகளுக்கு ஊழியர்கள் செல்லும் நாட்கள், புகார் பிரிவு தொலைபேசி எண்கள் ஆகியன தெளிவாக பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். அனைத்து அங்காடிகளிலும் குடும்ப அட்டைதாரர்கள் கோரும் பொருள்களை மட்டுமே வழங்க வேண்டுமென்றும் கட்டுப்பாடற்ற பொருள்களை (Non Rationed Commodities) வாங்குமாறு வற்புறுத்தக் கூடாது என்றும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மத்திய அரசு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து குறைத்துக் கொண்டே வந்து முழுத் தேவையான 65,140 கிலோ லிட்டருக்கு பதிலாக தற்போது 29,056 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. இருப்பினும் எரிவாயு இணைப்பு தரப்பட்டுள்ள விவரத்தை குடும்ப அட்டைகளில் பதிவு செய்து மண்ணெண்ணெய் தேவை உரியவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டுமென்று அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி **01.06.2011** முதல் **31.12.2013** வரை **8** இலட்சத்து **83** ஆயிரம் புதிய குடும்ப அட்டைகள் தகுதியானவர்களுக்கு வழங்கப்பபட்டுள்ளது. மேலும், இக்காலத்தில் **2** இலட்சத்து **54** ஆயிரம் போலிக் குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கம் செய்யப்பட்டுள்ளன. பொது மக்கள் அனைவரும் எவ்வித சிரமமுமின்றி தங்களுக்குரிய ஒதுக்கீட்டின்படி அத்தியாவசியப் பொருள்களைப் பெறும் வகையில் கடந்த இரண்டரை வருடங்களில் **374** முழுநேரக் கடைகளும் **732** பகுதி நேரக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு **60** நாட்களுக்குள் புதிய அட்டைகள் உரிய விசாரணைக்குப் பின் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். தகுதியற்ற மனுக்களை நிராகரிக்கும் போது அந்த விவரங்களையும் மனுதாரர்களுக்கு **60** நாட்களுக்குள் தெரியப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்ட சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 82 இலட்சத்து 11 ஆயிரத்து 721 (98.48%) குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசு தொகுப்பினைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.**

உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை மூலம் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு அத்தியாவசியப் பொருள்கள் கடத்தல் முற்றிலுமாக ஒடுக்கப்பட்டுள்ளது. **16.05.2011** முதல் **21.01.2014** வரை **23** ஆயிரத்து **592** வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 7 கோடியே **81** இலட்சம் மதிப்பிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட **15,039** நபர்கள் கைது செய்யப்பட்டு அவற்றுள் **514** நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் கார்டு (Smart Card) வழங்கும் முறை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, இதற்கென தேசிய மக்கள் தொகை பதிவேட்டிலிருந்து பொது மக்களின் பயோ–மெட்ரிக் தகவல்கள் அனைத்தையும் விடுதலின்றி பெறுவதற்கான நடவடிக்கைகளை அனைத்து மாவட்ட அலுவலர்களும் முனைப்புடன் செயல்படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் செயல் திட்டங்களின் முழுப் பயன்களும் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் கூட்டுறவு, உணவு மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் இணைந்து செயலாற்றிட வேண்டுமென்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இக்கலந்தாய்வு கூட்டத்தில் அரசு உணவுத்துறை செயலர் திருமதி எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் திரு.கே. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.பெ.சீத்தாராமன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9